பொது சன நூலகம்
02 JUL 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
கிடைக்கப்பெற்றது
02 JUL 1997
உரிய நடவடிக்கைக்காக

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 4

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 27 - 6 - 1997 இதழ்: 15

'கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்'

நீதிமொழிகள் 14. 27

# வசதிகளை மட்டும் நோக்காமல் அழைப்பை நோக்கிப் பயணந் தொடர்வோமாக!

',எமக்கு வரக்கூடிய வசதிளை மட்டும் நாம் நோக்கிக் கொண்டிராமல். ஆண்டவர் அழைத்த அழைப்புக்கேற்ப நமது பயணத்தைத் தொடரவேண்டும்'' என்றார் அருள்திரு பி. ஜே. சூரியகுமார் அடிகளார்.

கடந்த 15- 06- 97 இல் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண சபையினது காலை வழிபாட்டில் அருளுரை ஆற்றுகையிலே அடிகளார் இவ்வாறு கூறினார்.

மேலும் அவர்

''ஆபிரகாம் இறைவனால் அழைக்கப்பட்டபோது, தான் வாழ்ந்த இடத்தையும், தனது உறவினரையும் தான் அனுபவித்த ஆசீர்வாதங்களையும் கருத்திற் கொள்ளாது, இறைவன் தன்னை அழைத்த அழைப்புக்குக் கீழ்ப்படிந்தார் அந்த அழைப்புக்கேற்ப தனது பயணந்தொடர்ந்தார். தனது வயோதிபப் பருவத்தில் தனக்கு ஒரு மகனை இறைவன் தருவதாகச் சொன்னபோது அதனை நம்பினார். தனது ஒரே குமாரனை இறைவன் பலியிடக்கேட்ட போது அவர் தயங்கவில்லை, விசுவாசத்துடன் அவருக்குக் கீழ்படிவும் இருந்தது'

நாமும் கீழ்ப்படிவும், விசுவாசமும் உள்ளவர்களாய் நமது கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வோமாக'' என்றார்

## புதிய நியமனங்கள்

அராலித்திருச்சபை ஊழியன் சகோ. யூட் சுதர்சன் அதனோடு தொல்புரம் திருச்சபைக்கும்; சங்கானைத் திருச்சபை ஊழியன் சகோ. பி. தேவதாஸ் அத்தோடு மூளாய்த் திருச்சபைக்கும்; சகோ ஈனோக் புனிதராஜா அவர்கள் சத்தியபுரம் திருச்சபைக்கும்; சகோ ஆ. டெய்சி தெல்லிப்பழைத் திருச்சபைக்கும் ஊழியர்களாக நியமனம் பெற்றனர்.

## யாழ் கல்லூரி பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை 27 - 6 - 1997இல் நடைபெற்றது கல்வி அதிகாரி திரு. எஸ் ரட்ண ராஜாவும் அவர் தம் பாரியாரும் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டனர்.

## துஷாராவுக்கு முதலிடம்

திருகோணமலையில் நடந்து முடிந்த தமிழ்தினப் போட்டிகளில் பிரிவு - 3 இல்; யாழ் கல்லூரியை சேர்ந்த செல்வி துஷாரா பாவோ, தலில் முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டார். ஏனைய விபரங்கள் கிடைக்கவில்லை. சகோதரிக்கு 'உதயதாரகை' யின் வாழ்த்துக்கள்.

## யாழ் கல்லூரியின் பெறுபேறுகள்

யாழ் கல்லூரியில் க. பொ த. (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுள் 10 பேர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் ஜெயப்பிரியா ஜெயவீரசிங்கம் 7D 1C; பிரதீபா யோகேந்திரராஜா 7D 1S எனும் பெறுபேறுகளைப் பெற்றனர். பவானி நடராஜா. விஷ்ணுதேவி இராஜசிங்கம் ஆகியோர் 7D களை பெற்றனர். இருவருக்கும் ஒரு பாடத்தில் பெறுபேறு கிடைக்கவில்லை சிவஜா சிதம்பரநாதன், கோபிகா வேலாயுதம் ஆகியோர் 6D, 1S ஐப்பெற்றனர். இருவருக்கும் ஒரு பெறுபேறு கிடைக்கவில்லை. கலானி இராமச்சந்திரன், ரேவதி தேவதாசன் 5D, 3S, ஐப் பெற்றனர். கனகரட்ணம் ஜெகஜீவன் 5D, 2C, 1S ஐப் பெற்றார்' சுஜித்தா ஸ்கந்தராஜா 5D 2C பெற்றார். ஒரு பாடத்தின் பெறுபேறு கிடைக்கவில்லை. இவர்களை 'உதயதாரகை' உளமார வாழ்த்துகின்றது.

## உதவிக்குரு அபிடேகம்

தெ. இ. திருச்சபை ஊழியர்களான சகோ. டி. போல் சுரேஷ் (ஜெயபுரம் ஊழியர்); சகோ. வி. எஸ். பத்மதயாளன் (நிறைவு நல்லூர் ஊழியர்); சகோ. எஸ்-ஜோன் செல்வம் (விசுவமடு ஊழியர்); சகோ. டி. ஜே குணதேவி (கொழும்பு உதவி ஊழியர்) ஆகியோர் பேராயரால் கொழும்பில் உதவிக்குரு அபிடேகம் பெற்றனர்.

## புதிய நிர்வாகத் தெரிவு

யாழ் கிறிஸ்தவ ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்யும் கூட்டம் உப தலைவர் திரு. S. தனபாலன் தலைமையில் அருள்திரு எஸ். பி. நேசகுமார் அவர்களின் செபத்துடன் ஆரம்பமானது.

புதிய நிர்வாகிகள் பி. வ. று:- தலைவர் திரு. எஸ். தனபாலன்;- உப தலைவர்- வைத்தியக் கலாநிதி சி. ராஜேந்திரா, செயலாளர்- அருள்திரு எஸ். மில்ரன்; பொருளாளர்- திரு. பென் குலரத்தினம் பேராயர் எஸ். ஜெபநேசன் அவர்களது செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

## பரிசளிப்பு விழா

யாழ் பரி. யோவான் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா 28- 06- 97 இல் நடைபெற ஒழுங்காகியுள்ளது. பிரதம விருந்தினராக இலங்கைத் திருச்சபையின் கொழும்பு திருமண்டலப் பேராயர் பேரருள் திரு. கெனத் பெர்ணான்டோ கலந்து கொள்ளவும்; கல்லூரி அதிபர் S. தனபாலன் கல்லூரியின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

## நற் செய்திக் கூட்டம் வரணியில்...

26-05-97 அன்று சுற்றிவளைப்பின் இடர்பாடு மத்தியிலும் வரணியில் நற்செய்திக் கூட்டம் ஒன்று சிறப்பாக நடைபெற்றது. காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 1. 30 மணி வரை இந் நிகழ்வு நடைபெற்றது. ஏறத்தாழ 500 பேர் இந் நிகழ்வில் பங்குபற்றினர். வட்டுக்கோட்டையிலிருந்து சென்ற நற்செய்திக் குழுவினருடன் வரணி உடுப்பிட்டி, குடத்தனை, சாவகச்சேரி, நுணாவில், யாழ்ப்பாணம், உசன் திருச்சபையினரும் இணைந்து கொண்டனர். வில்லுப் பாட்டுகளினாலும் நாடகங்களினாலும் நிகழ்ச்சி பெருகேறியது. அருள்திரு நவேந்திர அனுகூலன் அவர்களும், அருள்திரு எஸ். ஐ. ஆனந்தராஜன் அவர்களும் இதன் ஒழுங்குகளைச் செய்வதில் முன்நின்று உழைத்தனர். பேராயர்; அருள்திரு டி. சி. இரத்தினசிங்கம் சகோ. ஈனோக் புனிதராஜா அடங்கிய நற்செய்திக் குழுவினர் வட்டுக்கோட்டையில் இருந்து புறப்பட்டுச் சென்றனர்.

## பல கல்விமான்களை உருவாக்கிய யாழ். கல்லூரி

'யாழ். கல்லூரி பல கல்விமான்களை உருவாக்கிய சிறப்பு வாய்ந்தது. முதலாவது வெளிவாரிபட்டப் படிப்புக்கான கல்வியினை முதன் முதலாக நாம் யாழ்ப்பாணக் கல்லூரியிலேயே கண்டுகொண்டோம்' என்றார், யாழ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலயம்1க்கான கல்விப்பணிப்பாளர் திரு. S. ரட்ணராஜா.

யாழ். கல்லூரி முதல்வர் திரு. ஜீ. இராஜநாயகம் தலைமையில் 27- 06- 97 இல் பரிசளிப்பு விழா நடைபெற்றது ஆரம்ப செபத்தை கலாநிதி ஆர். ஜீ. போட்டர். அவர்கள் செய்தார். வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து முதல்வரின் அறிக்கை இடம்பெற்றது. அதன் பின்பு அருட்கலாநிதி டானியேல் பூவரின் தினத்தை ஒட்டி

(4ம் பக்கம் பார்க்க)

## இன்பச்சோலையில்.,.

கடந்த 11- 06- 97 புதன்கிழமை அன்று பி. ப. 3 மணிக்கு வட்டுக்கோட்டை முதலி கோவிலடியில் உள்ள இன்பச் சோலையில் நற்செய்திக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வை அராலி, தொல்புரம், சமாதானக்கோட்டை, இன்பச்சோலை திருச்சபை மக்கள் இணைந்து நடாத்தினர். அருட்திரு டி. சி. இரத்தினசிங்கம் குழுவினரது ஆரம்ப ஜெபத்துடன், 'அருள் விருந்து' எனும் வில்லுப் பாட்டு நடைபெற்றது. இதில் பின்னணி பாடகர்களாக சமாதானக் கோட்டை வாலிபர்கள் கலந்து கொண்டனர். இன்பச் சோலைப் பிள்ளைகள் பல பாடல்களைப் பாடினர். அராலி வாலிபர்கள் இவற்றிக்கு பின்னணி இசை வழங்கினர். மேலும் சிறப்பு நிகழ்வாக 'கருணாமூர்த் ' திரைப் படம் காண்பிக்கப்பட்டது. இப் படத்தினை மையமாகக் கொண்டு, ஓர் சிறிய இறைச்செய்தியின் பின் திரைப்படம் ஆரம்பித்தது. தொல்புரம் சபை மக்கள் இதற்கான செலவினைத்தாங்கினர். மேற்குறிப்பிட்ட இடங்களை சேர்ந்த ஏராளமான மக்கள் இந் நிகழ்விற்கு வந்திருந்தனர். சபை, சமய வேறுபாடின்றி பல்வேறுபட்ட மக்களும் வந்திருந்தமை, உற்சாகம் அளிப்பதாய் அமைந்தது. இறுதியாக, அருட்திரு. டி. சி. இரத்தினசிங்கம் அவர்களது ஜெபத்துடன் கூட்டம் இரவு 7 மணியளவில் நிறைவெய்தியது

# திருச்சபை ஐக்கியத்தின் பொன் விழா ஆண்டு 1947 - 1997

# சிறார் சோலை

அருட்குறள்:-

"நீரின்றி மீன் சிறிது வாழ்ந்திருக்கும், ஆனால் (யேசுவே) நீரின்றி நான் சிறிது வாழ்தல் அரிது"

## அன்பான தம்பி தங்கைகளே!

ஒரு தெருவில் சிறுவர்கள் உற்சாகமாகப் பந்து விளையாடிக் கொண்டிருந்த போது ஒரு லொறி வந்தது. சிறுவர்கள் யாவரும் கலைந்து ஓடினாலும் ஒரு சிறுவனின் காலில் சக்கரம் உராய்ந்து, அடிப்பட்டுவிட்டது. இச் சமயத்தில். அந்தப் பக்கமாக நேரு தன் காரில் வந்தார். எல்லோரும் "நேருவுக்கு ஜே!' எனப் பெருங்குரல் எழுப்பினர். காரை விட்டிறங்கிய நேரு காயப்பட்டுக் கிடந்த சிறுவனை நோக்கி நேராக ஓடினார். 'ஒரு சிறுவன் காயப்பட்டு கிடக்கிறான். அவனைக் கவனியாமல் எனக்கு ஜே போடுகிறீர்களே ¿ எனக்கூச்சல் போட்டார். அச்சிறுவனை தன் காரில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

நமது இறைவனும் தனக்குப் புகழ் பாடுவதை மட்டும் விரும்பாமல்; தான் விரும்பும் வண்ணம், மனுக்குலம் செயலாற்ற வேண்டும் என விரும்புகிறார் என்பதை உணர்ந்து செயற்படுவோமா?

### சிறார் சிரிப்பு

ஆசிரியர்:- தலைக்கு மேல் வேலை இருக்கிறது என்று லீவு கேட்கிறாயே, அப்படி என்னடா வேலை?

மாணவன் முடிவெட்டுகிற வேலைதான் சேர்.

### சென்றவாரப் புதிரின் விடை

யாழ்ப்பாணக் கல்லூரியினது ஆகும்

### இவ்வாரப் புதிர்

"இயேசுகிறிஸ்துவே உலகின் ஒளி" எதன் மகுட வாக்கியம்?

தெரிந்தவர்கள் விடையை எழுதி அனுப்புங்கள்
தெரியாதவர்கள் அடுத்த இதழை புரட்டுங்கள்.

சரி தம்பி தங்கைகளே!! விடைபெறும் நேரம் வந்து விட்டது, மறு இதழில் கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
தாரகை அண்ணா

## இணுவிலில் புதிய பகல் பராமரிப்பு நிலையம்

22- 5- 97 அன்று வியாழக்கிழமை மாலை 3. 30 மணிக்கு இணுவில் மேற்கு பகுதியில் ஒரு பகற்பராமரிப்பு நிலையம் உதயமானது. நிலையத்தினை தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதிவண கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் திறந்து வைத்தார்கள். இவ் வைபவத்தில் வரவேற்புரையினை இணுவில் சபை ஊழியன் சகோதரன் பி. தேவராஜா நிகழ்த்தினார். பேராயருடன், உடுவில் சேகர ஊழியர் வண. வி. இராஜ்குமார் போதகர் அவர்களும் உரையாற்றினார்கள். பேராயர் அவர்கள் நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில். "சிறுவர்கள் தான் எதிர்கால சிற்பிகள்" சிறு பிள்ளைகளுக்காக இந்த இடத்தில் நிலையத்தினை ஆரம்பிக்கிறோம். இந்நிலையம் பிள்ளைகளுக்கு உள உடல், ரீதியான வளர்ச்சிக்கு உதவும் முகமாகவும், சாதி, மத வேறுபாடின்றியும் இந் நிலையம் செயற்படும் என்று கூறினார்- இவ்வைபவத்தில் மேலும் பலர் கலந்து சிறப்பித்தார்கள். கிராம உத்தியோத்தர், தாவடி சுதுமலை பனை தெங்கு அபிவிருத்தி சங்கத் தலைவர், அண்ணா சன சமூக நிலையத் தலைவர், அங்கத்தினர்களும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பித்தார்கள் இறுதியில் சபை ஊழியனின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## தமிழ்த்தின விழா

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் தமிழ்த்தின விழா தமிழ்ச் சங்கத் தலைவி செல்வி வினித்தா பிரீடா பெனாண்டோ தலைமையில் நடந்தது. ஆசியுரை கல்லூரி அதிபர் திருமதி இராசரத்தினம் அவர்களால் வழங்கப்பட்டது. வலயம் 1 உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. தாளையா கலந்து கொண்டார். நடனம்; சிறுவர் பாடல்; தில்லானா நடனம்; விடியலை நோக்கி' என்ற நிகழ்த்திக் காட்டல்; குழந்தை சண்முகம் நெறிப்படுத்திய "மன்னன் இடிப்பாஸ்" நாடகம் ஆகிய கலை நிகழ்வுகள் நடைபெற்றன. பரிசில்கள் பாடசாலை முகாமையாளர் திருமதி சற்குணசிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. செயலாளர் செல்வி ஜபானந்தி இராஜேந்திரன் நன்றியுரை நவின்றார்.

"உங்களவன்" எழுதும்

# நிம்மதி எங்கே?

காலைக்கதிரவன் தனது பயணத்தை ஆரம்பிக்க, சேவல் தனது கடமையை நிறைவேற்றும் வண்ணமாக "கொக்கரக்கோ" ராகம் படிக்க, 'நாங்கள் மட்டும் குறைந்தவர்களா என்ன?' என்று கேட்கும் வண்ணமாக, —— கறுப்புக் காகம் உட்பட அழகிய குரல்வளம் நிரம்பிய, நிரம்பாத குருவிகள் யாவும் மெல்லிசை மீட்டிட அந்த இனிய காலைப் பொழுது உதயமாகிறது.

ஆ—' என்று ஒரு பெரிய கொட்டாவி ஒன்றை இழுத்து விட்டுக் கொண்ட சண்முகநாதரின் ஒரே ஆண்மகன் ராஜா படுக்கைக்கு விடைகொடுத்து படுக்கையை விட்டுப் பிரிந்து கொள்கிறான் தனது காலைக் கடன்களை நேரம் பிந்தாது முடித்துக் கொண்ட ராஜா ஹாலுக்கு வந்து சுவரில் தொங்கிய மணிக்கூட்டைப் பார்க்கிறான். அதன் சின்ன முள்ளு ஆறிலும் பெரிய முள்ளு ஐந்திலுமாக ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தது. "ஓ ... ஆறு இருபத்தைஞ்சாச்சு ... ரியூஷனுக்கு இன்னும் ஐஞ்சு நிமிஷந்தான் கிடக்கு" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்ட ராஜா, புத்தகங்களை நோக்கி வீரநடை பயில்கிறான்.

ஆம் ராஜா உயர்தர வகுப்பில் இறுதியாண்டு கற்றுக்கொண்டிருக்கிறான். இன்னும் ஐந்து மாதங்களில் பரீட்சை எடுக்கப்போகும் ராஜா, தனது பரீட்சைக்காக துரிதமாக படித்துக்கொண்டிருந்தான் தனது ரியூஷன் கொப்பிகளை துரிதமாக எடுத்த ராஜா, திண்ணைக்கு வருகிறான். அங்கே சாய்வு நாற்காலியில் அவனது தகப்பனார் நித்திரா தேவியைக் கட்டி அணைத்தவாறு படுத்திருந்தார். "அப்பா—அப்பா" என எழுப்பி பார்த்தான். "ஹூம்" அவர் தொடர்ந்து நித்திரா தேவியைக் கைவிடா வண்ணமாக இன்னும் இறுக்கி அணைத்தவாறே இருந்தார். "இனியும் இவரை எழுப்பி பயனில்லை" என்று கூறிய ராஜா அடுக்களையில் காலைத் தேநீர் தயாரித்துக் கொண்டிருந்த தாய் செல்லம்மாவிடம் 'அம்மோய் ..... போட்டு வாறன். ரியூஷனுக்கு நேரம் போச்சுது .." என்று கூவுகிறான். "பொறணை அப்பு ஒரு இரண்டு நிமிஷம் இருந்து கொள். உனக்கு தேத்தண்ணி வச்சுக் கொண்டிருக்கிறேன்." தனது பாசமழையைக் கொட்டித் தீர்க்கிறாள் "சரியம்மா கெதியாய்த் தாங்கோ

### தொடர் கதை

எனக்கு நேரம் போட்டுது... கெதியாய்' என்று விட்டுத் திண்ணையிலிருந்து கொள்கிறான். "இந்தா அப்பு ..." ம் ...... என்னப்பு சீனியேதும் காணாமல் இருக்குதே..' 'இல்லையம்மா நல்லாயிருக்கு. ஆ இந்தாங்க ... நான் போட்டு வாறன்' ... 'சரி கெதியாய் போட்டுவா ... கவனம்... காலங் காத்தாலை .. இந்தக் காலத்திலை ரியூஷன் விட்ட உடனை' ஓடிவந்துடோனும் கவனம் ...' தனது மகனை பெருமூச்சென்றுடன் வழியனுப்பி வைக்கிறாள் அவள்.

ரியூஷன் தொடங்குகிறது. ரியூஷன் மாஸ்ரர் தனது விரிவுரையை விரித்துரைக்க, ...... தனது தொண்டயினை ஒரு செருமலுடன் ஆயத்தம் செய்கின்றார். அப்போது சேகர் . அங்கே அவசரமாக ஓடிவருகிறான். 'சேர் சேர் ... ஒரு நிமிஷம் ... மன்னியு கோ ..." அவனது பதற்றத்தைக் கண்ட ஆசிரியர் கூட ஒரு திகைப்புடன் நோக்கிறார். 'டேய் சேகர் ... என்ன வேர்க்க விறுவிறுக்க ஓடிவாராய் என்ன விஷயத்தை சொல்லு பதற்றப் படாதே ' 'ஓம் சேர் ராஜா ராஜா ' ஓம் ... நான் இஞ்சை தான் இருக்கிறேன் என்ன ' 'ஓ ... ராஜா ... உனக்கு என்னெண்டு சொல்றதெண்டே ...... தெரியவில்லை' என்ன சேகர் ... நீ என்ன சொல்றாய் ?. ராஜாவின் இந்தக் கேள்விக்கு பின் சேகர் விடயத்தை கூற ஆரம்பிக்கிறான். (தொடரும்)

## வாழ்க்கைக்கு சில....

- ☐ நம்பிக்கையும். விடாமுயற்சியும் தான் வாழ்க்கை உச்சியின் ஏணிப்படிகள். எனவே நம்பிக்கையுடன் முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்
- ☐ நாம் மற்றவனைப் பற்றி சிந்திக்க முதல் எம்மைப் பற்றிச் சற்று சிந்திப்போம்.
- ☐ நீங்கள் பேசுவதையெல்லாம் மற்றவர்கள் கேட்க வேண்டுமென நீங்கள் நினைப்பதை போன்று மற்றவர்கள் பேசுவதையும் பொறுமையுடன் கேட்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
- ☐ பலனை எதிர்பார்த்து உதவி புரியாதீர்கள். புரிந்திட்ட உதவியை நினைக்கவும் மறவாதீர்கள்
- ☐ இவங்க சின்னப பசங்க இவங்களுக்கென்ன தெரியும்" என்று, தட்டிக் கழிக்காதீர்கள் இவர்களிடமும் கற்றுச் கொள்ளலாம் தட்டிக் கொடுங்கள்.
- ☐ இருக்கின்ற நண்பர்களையும் எதிரிகளாக்குவதை விடுத்து, எதிராளிகளையும் நண்பராக்குங்கள்.
- ☐ எனது சுய நலனுக்காக இன்னொருவன் சுயகௌரவத்தை கெடுக்கவோ எனது பசிக்காக இன்னொருவனை பட்டினியாக்கவோ நினைக்காதீர்கள்

தொகுப்பு J. M, T. றொட்றிக்கோ
நம்பிக்கை இல்லம்

## உதயதாரகை

# யாழ். மாணவர்களின் கல்வி வளர்ச்சி

கலாநிதி டானியல் பூவரின் தினம் இன்றாகும் இன்றைய நாளிலே அவரை நினைவு கூறுகின்ற நாம், யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வித்திடத்தக்கதாக அவரில் ஏற்பட்ட இறை ஏவுதலுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

யாழ். மாணவர்களது கல்வி வளர்ச்சியை நோக்கும் போது நாம் நிச்சயம் பெருமைப்பட்டே ஆக வேண்டும். நம் மத்தியில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகள், மனதில் உளத் தாக்கங்களை ஏற்படுத்தத் தக்கவையாயிருப்பினும்; மாணவர்கள் தமது கல்வியை மேற்கொளவதற்கு ஒப்பீட்டளவில் போதிய வசதி வாய்ப்புக்கள் இல்லாதிருப்பினும்; யாழ்ப்பாண மாணவர்கள் தாம் எந் நிலையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்தே வருகின்றனர். அவர்கள் பெற்றுக் கொள்கின்ற பரீட்சைப் பெறுபேறுகள் இதைத்தான் சுட்டிக்காட்டுகின்றன.

'குப்பி விளக்கில்' கற்றாலும் இவர்கள் சளைக்காதவர்களாகவே திகழ்கின்றனர். உண்மையிலே கல்வியில் அக்கறையுடைய மாணவர்கள் எந்தத் தடைகள் வரினும் பின்வாங்க மாட்டார்கள்.

யாழ் மாணவர்களது கல்விக்கு வித்திட்ட பெருமையில் பெரும் பங்கு அமெரிக்க மிஷனரிமாரையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தம்மை இறைவனுக்கு அர்ப்பணித்து, சேவையாற்ற யாழ்ப்பாணம் வந்த அவர்கள்— மக்கள் மத்தியில் இருந்த மூடநம்பிக்கைகளையும், தவறான கொள்கைகளையும் போக்கி, தக்க அறிவைப் புகட்ட முன் நின்று உழைத்தனர். தம்மை அர்ப்பணித்துத் திருத் தொண்டாற்றினர்.

இவர்களுள், கல்வித் தொண்டாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவரே டானியல் பூவராகும். இன்று அவரை எமக்களித்த இறைவனுக்கு நன்றி சொல்லும் நாம், அவர் ஊன்றிய விதை பெரும் மரமாகத் தளைத்த சிறப்பை எண்ணி இன்றும் என்றும் களிப்புறுவோமாக!

---

கல்லூரி வரலாற்றில்

# டானியல் பூவர் அன்றும் இன்றும்

நவாலியூர் ரமேஷ்

> யாழ்ப்பாணக்கல்லூரிவருடாந்த பரிசளிப்பு விழா எதிர் வரும் **27- 06- 97** அன்று கல்லூரி முதல்வர் திரு. ஜி இராஜநாயகம் தலைமையில் இடம் பெறுகிறது- இந்த நாள் டானியேல் பூவா அவர்களின் ஸ்தாபகர் தினமாகும் இதையொட்டி இப் பிரசுரம் உதயமாகிறது

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியானது இரண்டாயிரம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்ற பொன்னவர் (golden age) காலத்திற்கு வித்திட்ட பல அமெரிக்கன் மிஷன் அறிஞர்களில் டானியல் பூவர் ஓர் மைற்கல் ஆவர்.

செல்வச் செழிப்பு மிக்க அமெரிக்க நாட்டில் இருந்து, தாய் நாட்டு சுகபோகங்களையெல்லாம் உதறிதள்ளி விட்டு மிஷனரி ஊழியனாக உருவாகி இலங்கை வந்தடைந்தார் டானியல் பூவர்.

1815ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23ம் திகதி (டறியட்) DRYAD எனும் பாய்க் கப்பலில் பூவர் உட்பட ஒன்பதுபேர் யாழ்ப்பாணம் புறப்பட்டனர்.

ஐந்து மாதங்கள் கடற்பிரயாணம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்தடைந்தனர் பூவர் குழுவினர். அமெரிக்காவின் புகழ்பூத்த பல்கலைக்கழக கல்லூரியென்றில் கற்றுத்தேர்ந்த கல்வி மான் டானியல் பூவர்.

அவர் தாம் கற்ற கல்வியின் பயனால் ''கல்வியே எல்லா வித முன்னேற்றங்களுக்கும் ஒரே வழி'' என்ற நோக்கில் 1816ல் தெல்லிப்பளையில் தமிழ் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டது. இதன் பொறுப்பாசிரியராக டானியல் பூவர் அவர்களே பதவியேற்றார்.

இவ்வாறு அளவெட்டி, மாவட்டபுரம் பகுதியில் அமெரிக்க மிஷன் பாடசாலைகளை நிறுவி கல்விச் சமூகத்தை உருவாக்கிக் கொண்டிருந்த வேளையில்;

அமெரிக்க மிஷன் விடுதிப் பாடசாலைகளில் கற்ற மாணவர்களின் ஆளுமையையும். ஊக்கமும், திறமையும் டானியல் பூவருக்கு உற்சாகத்தை அழித்தது-

இவ் உற்சாகத்தின் வெளிப்பாடு, வட்டுக்கோட்டையில் ஒரு உயர் கல்விப் பீடம் ஒன்று அமைக்க வேண்டும் என்பது முடிவாயிற்று'

இதன்பலனாக 1823ம் ஆண்டு மாச்சு மாதம் 22ம் திகதி கல்லூரிக்கு முன்னேற்பாடாக ஒரு மத்திய பாடசாலையை வட்டுக்கோட்டையில் நிறுவினார்கள்.

இதன் தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு டானியேல் பூவரே சிறந்தவர் என அவரது சகாக்கள் ஏகமனதாக தெரிவு செய்தார்கள்.

இவரது தலைமையில் உயர்கல்வி நிறுவனத்தை பட்டங்கள் வழங்கும் கல்லூரியாக நிறுவ மூயன்றனர் உருவாக்கினர்.

டானியல் பூவரின் வட்டுக்கோட்டை கல்வி பீடமானது கலைத்துடிப்பும், கல்விச் செழிப்பும் நிறைந்ததோர் உள்ளூர் மாணவர் பரம்பரையை உருவாக்கியது.

ஆரம்பத்தில் 6 கல்விமான்களை உருவாக்கிய செமினரி தற்போது பல ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கும் கல்லூரியாக யாழ்ப்பாணக் கல்லூரி நிகழப் பெற்றறு என்றால். அது டானியேல் பூவரின் ஈடு இணையற்ற சேவையே எனலாம்.

டானியேல் பூவரின் மேன்மைகளை எடுத்துக் காட்டும் ''சுப்பிரதீபம்'' நூல் பின்வருமாறு கூறுகிறது, ''வாய்மையும், தூய்மையும் நீதியும். நிறைவும், அன்பும், பொறையும் சிறந்து விளங்கிய பூவர் ஐயர் (டானியல் பூவர்) முதலிய மகான்கள் இங்கிருந்து அலகை வாயிலும், அகந்தை வாயிலும், உலக வாயிலும், உடல் வாயிலும் அகப்பட்ட ஆன்மாக்கள் வீடு பெற்று உய்யும்படி இரட்சகா பெருமானின் திருநாமத்தை உபதேசித்தும், கைமாறு கருதாது, உதவுகின்ற மேகம் போல வைதீக லௌகீத கல்விப் பொருளை வழங்கினார்கள்'' என கூறப்பட்டது.

டானியல் பூவர் பத்திரிகைத் துறை (Journalisrn), அச்சகத் துறை, நூற்பண்பாடு என்பனவற்றில் கைதேய்ந்த ஒரு கலைஞராக சமுதாயத்தில் தோன்றியவர். பத்திரிகைக் கலையை முறையாகக் கற்றுத் தெளிந்தவர்.

சகலகலா வல்லமை பொருந்திய டானியேல் பூவரை நினைவுகூரும் நன்னாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. டானியேல்பூவரின்எழுத்துத் துறையாக்கமும் அவரால் யாழ்ப்பாணச் சமுதாயம் அடைந்த நன்மைகள் எண்ணில் அடங்காதவை.

இவரது திறனாற்றலால் யாழ்ப்பாணக் கல்லூரி சிறப்படைகிறது. டானியேல் பூவர் நூலகமும் வளர்ச்சியடைகிறது. பல கல்விமான்கள் அறிஞர்களை உருவாக்கிய, உருவாக்கிவரும் நூலகமும் சுடர்விட்டு எரிகின்றது.

டானியேல் பூவரின் பெருமைகளை எடுத்துக் கூற சொற்கள் போதுமானவையல்ல இப் பெருந்தையின் நாளிலே எமது கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரி முதல்வர் திரு. ஜி. இராஜநாயகம் தலைமையில் இடம் பெறுகின்றது. (27- 06- 97 அன்று)

யாழ்ப்பாணக் கல்லூரி மட்டும் டானியேல் பூவரால் பெருமையடையவில்லை, தமிழ் நல்லுலகு கூறும் முழுச் சமுதாயமும் இப் பெரியாரை ஒரு கணம் நினைந்து தலைவணங்குகிறது.

---

# ஆதியாகமம் பேசுகிறது

அறிவுப் பாதையிலே பின் தங்கி நின்ற அன்றைய பாமர யூத மக்களின் பலதரப்பட்ட இலக்கிய ஒன்றிணைப்புகளின் மூலம் காலத்தையும் அறிவையும் கடந்த நித்திய பேருண்மையை உலகிற்கு அளித்தார் தேவன்- அறிவிலே தேர்ந்த அன்றைய பாபிலோனியரும் எகிப்தியரும், கிரேக்கரும் கண்டடையாத உண்மைகள் யூதரின் மறையில் பொதிந்துள்ளன.

ஆதியாகமம் முதல் இரு அதிகாரங்களின் சுவையான உருவகத்தையும் கதையையும் ஊடுருவிப் பார்ப்பது வெள்ளொளியை (சூரிய ஒளி) அரியமொன்றினூடாக பார்ப்பதற்கு மிக ஒப்பானது. ஒரே ஒளிக் கற்றையினால் ஏழு வெவ்வேறு நிறக்கதிர்களை பிறப்பிப்பதனைப் போல ஒரே கடவுளால் ஒரே வார்த்தையினால் 7 நாட்கள் படைக்கப்பட்டன. இயற்கை ஒளியில் 7 நிறங்கள் பொதிந்திருப்பதை போல இறைபடைப்பில் 7 நாட்கள் என்பது இயற்கையின் இரகசியத்தை வெளிப்படுத்தும் காலங்களாகும்.

படைப்பின் 7 நாட்களும் தரும் உண்மைகள் மூன்றாகும்.

1) ''வானமும் பூமியும்'' ஒரே கடவுளால் படைக்கப்பட்டவை. பாபிலோனிய புராணங்களின் படி ஜோடி, ஜோடியாகத் தோன்றிய பல கடவுளர்களிடையே நடந்த போரினால் உலகம் தோன்றியது எனப்படுகிறது. ஆனால் வேதாகமத்தின் படி உலகம் இறைவனின் விருப்பத்தாலும் வார்த்தையிலும் தோன்றியது.

2) இறைவன் ஒருவரே, நன்மையின் வடிவானவர். படைப்பு அனைத்தையும் நன்மையாகக்காண்கிறார். அவரால் உருவாக்கப்பட்ட மண்ணும், மரம், செடி, கொடி, மிருகங்கள் யாவும் பூரணமானவையும் நன்மையானவையையும் ஆகும். மண்ணையும் மனித உடலையும் இழிவு பொருளாக, அழிவிற்குரியதாக கருதினர் கிரேக்கர், ஆனால் வேதாகமம் இவையனைத்தும் இறை மாண்புக்கும் மீட்பிற்கும் உரியனவாக கருதுகின்றதனால் அனைத்தும் நன்மையானவை.

3) உயிரினங்களில் உன்னத படைப்பு மனிதன். படைப்பின் மணிமகுடம் இறைசாயல் பெற்ற மனிதனே, அவன் புனிதப்பிறவி; ஏனெனில் இறைசாயலில் உருவாக்கப்பட்டவன்.

முதல் அதிகாரம் கடைபிடிக்கும் தெளிவான ஒழுங்குக் கிரமத்தை மறந்து முதல் ஆதிகாரம் கூறும் அதே உண்மையை இரண்டாம் அதிகாரமும் எடுத்துக் கூறுகின்றது.

வண. J.T.

(தொடரும்)

---

## நெடுந்தீவுக்கு விஜயம்

முன்னாள் பேராயர் அருட்பெருங் கலாநிதி டி. ஜே. அம்பலவாணர், திட்டப்பணிப்பாளர் திரு வி. மித்திரரஞ்சனுடன் இணைந்து நெடுந்தீவுக்கான விஜயம் ஒன்றை இவ்வாரம் மேற்கொண்டார்.

## வேதம் அரிய பொக்கிஷம்

ஏசாயா 66; 2 :- வேதவசனத்துக்கு நாம் நடுங்கவேண்டும்
சங்கீதம் 119: 7 16:- வேதவசனத்தை நாம் நேசிக்கவேண்டும்
அப்போ 17: 11 :- வேதவசனத்தை நாம் தினமும் வாஞ்சையோடு வாசிக்க வேண்டும்
2 தீமோத் 2: 15 :- வேதவசனத்தை நாம்படித்துப்போதிக்கவேண்டும்
சங் 1;2 யோசு. 1:8:- வேதவசனத்தை நாம் தினமும் தியானிக்க வேண்டும்
சங்கீதம் 119:1 :- வேதவசனத்தை நாம் மனப்பாடம்செய்யவேண்டும்
யோவான் 5: 35 :- வேதவசனத்தை நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும்
சங்கீதம் 119:11 :- வேதவசனத்தில் நாம்மகிழ்ச்சியாய் இருக்கவேண்டும்
யாக்கோபு 1:22 :- வேதவசனத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்
2 தீமோத் :- வேதவசனத்தை நாம் மற்றவர்களுக்குப் பகிரவேண்டும்

## வீட்டுப்பெருமை

### ஈரடிக்குறள்

★ கட்டிய தினத்திற் பெரிதுவக்கும் தன் வீட்டை
கூரையோடு கண்ட குரிசில்

★ காணிப்பிரச்சினையை வேரோடு களைவதற்கே
வேலியழித்தல் என்று அறி

★ அடிவளவிற் சென்று ஜொனிமைனை உழக்குதலை
நினையார் பிறவிப்பயனறிவார்

★ நெருநல் உளவீடு இன்றில்லையென்னும்
பெருமை யுடைத் திவ் நாடு

★ கொள்ளையர் புஸ்டோசர் குண்டு ஷெல் என
நான்கிற்கும் தப்பியதே வீடு

★ மதில்களின் வனப்பை வகைப்படுத்திக் காட்டவே
துளைபோடுதல் என்றுணர்

★ முயற்கொம்பைக் காண்பினும் காண்பர் காணாரே
துளைபோடாக் கல் வீட்டினை

★ கதவைக்கழற்றல் நிலையைப்பிடுங்குதல் ஷீற்றை எடுத்தல்
வேண்டா அயற்குடிமக்கு

★ மதில் வீடு கல்வீடு மாடிவீடு மண்வீ டெல்லாம்
சமரசம் காண்பது இந்நாட்டில்

★ ஆளில்லா வீடெல்லாம் ஓடெல்லாம் கழற்றுபவன் மண்டை
ஓடின்றிப் பிறப்பானென்றறி

ஜெ. சீலன்

## ஆதிப்பிதாக்களின் ஆயுட்காலம்

நோவா:- 500 வயதில் சேம், காம், யாபேத்தைப் பெற்றார் நோவாவின் நாட்கள் 950 வருடங்கள

ஆபிரகாம்:- 86 வயதில் அடிமைப் பெண்ணின் மூலம் இஸ்மவேலைப் பெற்றார் 100 வயதில் ஈசாக்கைப் பெற்றார். ஆயுட்காலம் 175 வருடங்கள்

சாராள்:- 90 வயதில் ஈசாக்கைப் பெற்று 127 வயதில் மரித்தார்.

ஈசாக்கு:- 180 வருடங்கள் உயிரோடு இருந்தார்

இஸ்மவேல்:- 137 வருடங்கள் உயிரோடு இருந்தார்.

யாக்கோபு:- 147 வயதில் மரித்தார்

யோசேப்பு:- 110 வருடங்களே இவரது ஆயுட்காலம்

மோசே:- கடவுளினால் விடுதலைவீரராக வழிநடத்தப்பட்டவர் 120 வயதில் மரித்தார்.

ஆரோன்:- இவர் இறக்கும் போது வயது 113 ஆகும்

யோசுவா;- கர்த்தரின் ஊழியக்காரராய் சீவித்து 110 வயதில் மரித்தார்.

தொகுப்பு:- திருமதி ரி. சாரங்கபாணி
நுணாவில்

## மட்டுவில் பகல்பராமரிப்பு நிலையம்

மேற்படி மட்டுவிலில் புதிய பகல் பராமரிப்பு நிலையம் 2/6/97 அன்று பேராயர் எஸ். ஜெபநேசன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விசேட உரைகளை சபைஊழியன் அருள் திரு ஜே. தேவருட்செல்வம்; சேகரக் குரு அருள்திரு அனுகூலன்; பேராயர் S ஜெபநேசன்; திட்டப் பணிப்பாளர் திரு- மித்திரரஞ்சன் கிராமசேவகர்கள் திரு. வாமதேவன், துரைரட்ணம்; மட்டுவில் மிஷன் பாடசாலை அதிபர் கே. துரைரட்ணம் ஆகியோர் நிகழத்னார். நுணாவில் ப. ப. நிலையப் பிள்ளைகள், சபைப் பிள்ளைகள் விசேட பாடல்கள் பாடினார்கள் ஆசிரியரின் நன்றியுரையுடனும் பேராயரின் ஆசீர்வாதத்துடனும் கூட்டம் நிறைவெய்தியது.

## விளையாட்டுப்போட்டி

தெ இ திருச்சபை சாவகச்சேரி பாலர் பாடசாலையின் வருடாந்த மெய் வல்லுநர் போட்டிகள் 31- 5- 97 நடைபெற்றது. சபைக் குரு அருள்திரு. பி. ஆர். நவேந்திர அனுகூலன் அவர்களின் செபத்துடன் நிகழ்வு ஆரம்பித்தது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச செலர் திரு. பி- சுந்தரம்பிள்ளை தமது உரையில்-: ''இது வரை செயற்பட்டது போல தொடர்ந்து இப்பாடசாலை திறம்பட செயற்பட வேண்டும்'' எனப் பிரார்த்தித்து, பயிற்றுவித்த ஆசிரியரையும், மாணவர்களையும் பாராட்டினார். சபைக்குரு தனது உரையில் இத்தனை திரளான மக்களைக் கண்டு மனம் மகிழ்வதாகவும், தொடர்ந்து இறையருளால் பாடசாலை வளரும் எனும் நம்பிக்கையையும் வெளியிட்டார்.

பிரதம விருந்தினர் பரிசில் வழங்கினார். பாடசாலை ஆசிரியர் திருமதி. லோஜி சற்குணசிங்கம் நன்றியுரை வழங்க, சபைக்குருக்கின் ஆசீர்வாதத்துடன் நிகழ்வுகள் இனிது நிறைவேறின.

✳ ✳ ✳

யாழ்ப்பாணக்கல்லூரி 17 வயதுஆண்களுக்கும் லீவை ஸ்போல்டிங் ஆண்கள் இல்ல மாணவருக்கும் இடையிலான கிரிக்கட் போட்டி 20- 06- 97 அன்று கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது. முதலாம் சுற்றில் லீவைஸ் அணியினர் 160 ஓட்டங்களையும்; யாழ். கல்லூரி அணியினர் 132 ஓட்டங்களையும் பெற்றனர். 2ம் சுற்றில் லீவைஸ் அணியினர் 202 ஓட்டங்களைப் பெற்றனர் இதில் 62 ஓட்டங்களை வே. கிருபாகரனும் 54 ஓட்டங்களை செ. நிதிந்தரூபனும் பெற்றுக்கொடுத்தார்கள். றிச்சேட் சிறந்த பந்துவீச்சாளராக செயற்பட்டார்- இப்போட்டி வெற்றி தோல்வியின்றி சமமாக நிறைவெய்தியது.

## பிரியாவிடையும் வரவேற்பும்

சங்கானைத் திருச்சபையில் சேவை புரிந்து இளைப்பாறிய சகோ. எஸ். ஜே. மாணிக்கம் அவர்களுக்குப் பிரியாவிடையும், புதிய ஊழியன் சகோ. பி தேவதஸுக்கு வரவேற்பும் கூறியும் ஒரு வைபவம் திருச்சபை முன்றலில் கடந்த 08- 06- 97இல் நடைபெற்றது. சேகரக் குரு எஸ் பி. ஜெயசிங்கம், செயலாளர் ராஜ்குமார், ஆதீனப்பிரதிநிதி முத்துராசா, தேவதர்சினி, அனுஷா ஆகியோர் சொற்பொழிவாற்றினார். பதிலுரையை இளைப்பாறும் ஊழியனும், புதிய ஊழியனும் வழங்கினார்கள்.

## ஞாபகார்த்த ஆராதனை

10-05-97 அன்று அவுஸ்திரேலியாவில் இறைபதம் அடைந்த திருமதி லிசி சின்னத்துரை அவர்களது ஞாபகார்த்த ஆராதனை, 10- 06- 97 அன்று அவரது சொந்த சபையாகிய அராலி திருச்சபையில் பி. ப 4 மணிக்கு நடைபெற்றது. இவ்வழிபாட்டினை எம் ஜுட் சுதர்ஷன் வழி நடத்தின்ார். பாராட்டுரையை அருள்திரு டி, சி. இரத்தினசிங்கம் அவர்களும், அருளுரையை பேராயர் கலாநிதி S. ஜெபநேசன் அவர்களும் வழங்கினர். விவிலிய வாசகங்களை திரு சத்தியமூர்த்தி அவர்களும், திரு. தனராஜாசிங்கம் அவர்களும் வாசித்தனர் ஆராதனையின் முடிவில் உறவினர்களால் தேநீர் உபசாரம் செய்யப்பட்டது.

## அமரர் சி. வல்லிபுரம்

நுணாவில் திருச்சபையைச் சேர்ந்த திரு. சி. வல்லிபுரம் 12/6/97 இல் காலமானார். இவர் அமரர் பாக்கியத்தின் அன்புக் கணவரும்; கிருபா, தயாகரன், திருச்சுதன், சாந்தி, அருளி, ஆகியோரின் பாசத் தந்தையுமாவார்

அன்னாரது நல்லடக்க ஆராதனையை 15- 6- 97ல் சபைக் குரு ஜே. அருட்செல்வம், வரணி குரு எஸ். ஐ. ஆனந்தராஜன் ஆகியோர் நடாத்தினர். திரு. அரியதாஸ், திரு. நவரட்ணம் செல்வன் திசோன் ஆகியோர் வேதப்பாடங்களை வாசித்தனர். திரு. கே. பாலசிங்கம், திரு. நடேசபிள்ளை ஆகியோர் அன்னாரைப் பற்றிச் சொற் பொழிவாற்றினர். கல்லறையில் உசன் குரு பென்ஜமின் ஜெயராஜா அவர்கள் நடாத்தினார் இவர் முன்னாள் ஆதீன சங்க உறுப்பினர் எனபது சுட்டிக்காட்டப்படதக்கது.

## பல கல்வி...

உரைச்சித்திரம் ஒன்று நிகழ்ந்தது வட்டார ரீதியாக முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட செல்வி சிவஜா சிதம்பரநாதனின் Ideal 'Woman' எனும் பேச்சைத் தொடர்ந்து, தமிழ் விழாவில் முதலிடம் பெற்ற செல்வி துஷாரா வசந்தகுமார் குரூஸின் பாவோதல் இடம்பெற்றது. அதன்பின் பிரமத விருந்தினர் உரையும்; பின்பு, அபிநயப்பாடல், நடனம் முதலிய நிகழ்வுகளும் இடம்பெற, அதன் பின்பு திருமதி யோகேஸ்வரி ரட்ணராஜா பரிசில்களை வழங்கினார். நன்றியுரையை கல்லூரியின் மாணவ தலைவர் செல்வன் என். சரவணபவானும், திரு ஆர். அனந்தரட்சகனும் நிகழ்த்தினர்

பிரதம விருந்தினர் மேலும்- ''19ம் நூற்றாண்டில் இலங்கை வந்து செய்த சேவைகளில் ஒரு முத்து யாழ். கல்லூரியாகும். வெளிவாரி, பட்டப்படிப்புப் பல்கலைக்கழக வாய்ப்பற்ற மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இங்கு கற்று அரங்கேறியவர்கள் தாம் வெளியுலகு சென்றாலும் யாழ். கல்லூரியின் பெருமைகளையே பேசுகின்றன: நானும் இக்கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் இக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற வகையில் இக்கல்லூரியின் வளர்ச்சிகண்டு பூரிப்படைகிறேன்'' என்றும் கூறினார்

✝

**வண. மார்க்கண்டு தேவதாசன்**

(தெ. இ திருச்சபை யாழ் ஆதீன ஊழியன்)

பூவுலகில் அவதரிப்பு 21/02/43
பரம அழைப்பில் 25/ 06/ 89

''நீதிமானுடைய பலன் ஜீவ விருட்சம்; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்கிறவன் ஞானமுள்ளவன்.''
(நீதிமொழிகள் 12: 30)

''கானான்''
நெழுக்குளம்
வவுனியா குடும்பத்தினர்

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீனக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் சகோ பி. தேவதாஸ் அவர்களால் 1997 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.